A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 33 / 2023**

திரு அ. விஸ்வநாதன்,
70, சேரன் ஒண்டிபுதூர்,
கோயமுத்தூர் – 641 016. ………மேல்முறையீட்டாளர்
(திரு அ. விஸ்வநாதன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.பே./ஒண்டிபுதூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருச்சி ரோடு, கோயம்புதூர் – 641 038.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ ஒண்டிபுதூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 1, JOC Cottage, கஸ்தூரி நகர்,
கோயம்புதூர் – 641 016.

3. உதவி மின் பொறியாளர்/ இ.பே/காந்தி நகர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
142, அண்ணாச்சி தோட்டம், சிந்தாமணிபுதூர்,
கோயம்புதூர் – 641 104.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி P.A. அருள்செல்வி, செயற்பொறியாளர்/இ.பே./ஒண்டிபுதூர்
திரு R.ரனதேவ், உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ ஒண்டிபுதூர்
திரு P. ஆனந்த், உதவி மின் பொறியாளர்/ இ.பே/காந்தி நகர்)

**மேல்முறையீட்டு மனு எண் 34 / 2023**

திரு செ.பழனிசாமி,
3/18, மகாலட்சுமி நகர், மசக்காளி பாளையம்,
கோயம்புத்தூர் – 641 015. ………மேல்முறையீட்டாளர்
( Rep. by திரு பி. கனகராஜ்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.பே./ஒண்டிபுதூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருச்சி ரோடு, கோயம்புதூர் – 641 038.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ சிங்கநல்லூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2212, 2வது தளம், சிங்கநல்லூர் கிழக்கு ரோடு, திருச்சி ரோடு,
சிங்கநல்லூர், கோயம்புதூர் – 641 005.

3. உதவி மின் பொறியாளர்/ இ.பே/வரதராஜபுரம்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
இந்திரா கார்டன், கோயம்புதூர் – 641 015.

. . . எதிர்மனுதாரர்கள்

(திருமதி P.A. அருள்செல்வி, செயற்பொறியாளர்/இ.பே./ஒண்டிபுதூர்
திரு G. முருகையன், உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ சிங்கநல்லூர்
திருமதி G.சந்தியா, உதவி மின் பொறியாளர்/ இ.பே/ வரதராஜபுரம்)

<u>மனு பெறப்பட்ட நாள்: 18-05-2023</u>

<u>கேட்புரை நாள்: 13-07-2023</u>

<u>ஆணை நாள்: 24-07-2023</u>

18.05.2023 அன்று பெறப்பட்ட திரு அ. விஸ்வநாதன் மற்றும் திரு செ.பழனிசாமி அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 33/2023 மற்றும் 34/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு எண் 33/2023 மற்றும் 34/2023-இல் கோரிக்கை சம்பந்தமான பொருள் பொதுவாக இருப்பதால் இவ்விரண்டு முறையீடுகளும் ஒன்றாக ஒரே சமயத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட மனுக்களின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 13.07.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் இரண்டு முறையீட்டுகளுக்கும் பொதுவான கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>மேல்முறையீட்டு எண் 33/2023 மற்றும் 34/2023 –க்கான பொதுவான ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

வீதப்பட்டி IIIB–லிருந்து III A1–க்கு மாற்றக் கோரியும், கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை உரிய வட்டியுடன் திருப்பித்தருமாறும், சேவைக் குறைபாடு, கடந்த ஏழுமாத காலமாக மன உளைச்சல் காரணமாக இழப்பீடு வழங்க வேண்டியும், மற்றும் வழக்கு செலவை எதிர்தரப்பிடமிருந்து பெற்றுத்தருமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் இயக்கி வரும் ஸ்ரீ ஸ்வாதி இன்ஜினியரிங் கம்பெனியின் வீதப்பட்டி IIIB–லிருந்து III A1–க்கு மாற்றித்தரக்கோரி விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் தளத்தை களஆய்வு செய்யப்பட்டதில் Milling machine உபயோகப்படுத்தி jobwork செய்யப்பட்டு வருவதை கண்டறிந்ததால் வீதப்பட்டி III A1–க்கு மாற்றித்தர இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, வீதப்பட்டி மாற்றக்கோரி மேல்முறையீட்டாளர் கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.10.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர் 21.04.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.04.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

Therefore, the forum concludes that the petitioner's unit is entitled to remain under LT Industrial Tariff III B and is to be billed under LT Industrial Tariff III B."

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.07.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு அ. விஸ்வநாதன் மற்றும் திரு செ.பழனிசாமி சார்பாக திரு பி. கனகராஜ் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி P.A. அருள்செல்வி, செயற்பொறியாளர்/ இ.பே./ ஒண்டிபுதூர், திரு R.ரனதேவ், உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ ஒண்டிபுதூர், திரு P. ஆனந்த், உதவி மின் பொறியாளர்/ இ.பே/காந்தி நகர், திரு G. முருகையன், உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ சிங்கநல்லூர் மற்றும் திருமதி G.சந்தியா, உதவி மின் பொறியாளர்/ இ.பே/ வரதராஜபுரம், கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

4.5 மேல்முறையீட்டு மனு எண் 33/2023 மற்றும் 34/2023 ஆகியவற்றில் உள்ள கோரிக்கை ஒன்றாக இருப்பதால் மேல்முறையீட்டு மனு எண் 33/2023–இல் உள்ள வாதங்கள் இங்கு தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

5.0 **<u>மேல்முறையீட்டு மனு எண் 33/2023–இல் உள்ள வாதங்கள்</u>**:

5.1 மேல்முறையீட்டாளர், திரு A.விஸ்வநாதன், Consumer No. 03045002347 8, கதவு எண் 70, சேரன் நகர், ஒண்டிபுதூர் என்ற முகவரியில் தனது மனைவி திருமதி விஜயா பெயரில் ஸ்ரீ ஸ்வாதி இன்ஜினியரிங் என்ற நிறுவனத்தை MILLING இயந்திரங்களை பயன்படுத்தி உற்பத்தி தொழில் செய்யும் குறுந்தொழில் நிறுவனம் நடத்தி வருவதாகவும், மின்பளுவாக 6 KW மட்டுமே பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 எனவே மின்னிணைப்பை குறுந்தொழில் நிறுவனங்களுக்குரிய 3A1 வீதப்பட்டியலுக்கு மாற்றித்தரக்கோரி விண்ணப்பித்ததாகவும், Application Reference Number 200030450722524 Application Date: 09–07–2022, UDYAM Registration Certificate–யும் சமர்ப்பித்ததாகவும், ஆனால் இன்று வரை தனது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதற்கான காரணமாக milling job work செய்து வருவதால் 3A1 வீதப்பட்டியலுக்கு தகுதி இல்லை என்று கூறப்பட்டதாகவும், தனது தரப்பு விளக்கமாக UDYAM Registration Certificate, TNERC Order regarding the 3A1 tariff & Industries ACT 1951 போன்றவற்றை சமர்ப்பித்ததாகவும், ஆயினும், இன்றுவரை தனது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே தான் மேற்கண்ட புகாரை 10–10–2022 அன்று CGRF–ல் online மூலமாக பதிவு செய்துள்ளதாகவும், அதன் பின் விசாரணை 25–11–2022 என்று தெரிவிக்கப்பட்டு பின்னர் அவ்விசாரணை 02–12–2022 தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டதாகவும், பின்னர் அத்தேதியிலும் விசாரணை நடைபெறாமல் வேறொரு தேதியும் குறிப்பிடப்படாமல் தள்ளி வைக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் தங்கள் தொடர் வற்புறுத்தல்களுக்குப் பிறகு 18.02.2023 அன்று விசாரணை நடந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 முப்பது நாட்களில் ஆணை வழங்கப்படாததால் பலமுறை தொடர்புகொண்ட பின்னர் எழுபது நாட்கள் கடந்த நிலையில், அவ்விசாரணையின் ஆணை 06.05.2023 அன்று கிடைக்கப்பெற்றதாகவும், மேலும் அவ்வாணையில் தான் சமர்ப்பித்த ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் என அனைத்தையும் புறம்தள்ள இயலாது என்றும், மேலும் எதிர்தரப்பு

(Distribution Licensee) எவ்வித ஆதாரங்களையும் சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு கூறிய பின்னர் தனது கோரிக்கையை மறுத்துள்ள செயல் ஒருதலைப்பட்சமானது மற்றும் நியாயமற்றது எனவும், Forum Finding பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள் தனது கோரிக்கையின் நியாயத்தை வெளிப்படுத்தியுள்ள நிலையில் ஆணையத்தின் இறுதி முடிவு முரணாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 விண்ணப்பித்த தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், 16-07-2022 ம் தேதியிலிருந்தே 3A1 TARIFF அமல்படுத்தவும், இந்நாள் வரை கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை உரிய வட்டியுடன் திருப்பித்தருமாறும், சேவைக்குறைபாடு, கடந்த ஏழுமாத காலமாக மன உளைச்சல் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்தியதற்கான அதிகபட்ச இழப்பீட்டுக்காகவும் மற்றும் வழக்கு செலவை எதிர்தரப்பிடமிருந்து பெற்றுத்தருமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.7 ஒட்டுமொத்தமாக புகார் பதிவு தேதியிலிருந்து ஆணை பிறப்பிக்க ஏழு மாதங்கள் எடுத்துக்கொண்ட நிலை தாமதமான நீதி என்பது மறுக்கப்பட்ட நீதி என்ற சட்ட அறத்தை மெய்ப்பிப்பதாக உள்ளதாகவும், இத்தகைய செயல்பாடு நுகர்வோர் நலனுக்கு எதிராகவும், CGRF நோக்கத்தையே சிதைப்பதாக உள்ளதாகவும், எனவே CGRF-கோவைக்கு தக்க அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கி எதிர்காலத்தில் இதுபோன்ற வண்ணம் நிகழாமல் நடுநிலையுடனும் நியாயமாகவும் செயல்பட தக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 The Respondent has submitted that the appellant was not discriminated and not put into irreparable hardship by the CGRF because the chairman CGRF has heard all the arguments of the appellant while conducting CGRF and the following final order disposed on 02.05.2023.

i) The appellant's industrial unit is entitled to remain under LT industrial tariff III B and is to be billed under LT industrial tariff III B.

6.2 The Respondent has submitted that regulations of TNERC & Electricity Act 2003 are meticulously followed by all respondents.

6.3 The Respondent has submitted that the Appellant Thiru A.Vishwanathan is having LT service connection No 03-045-002-3478 TF III B in the name of A. Viswanathan for his industry Sri Swathi Engineering works located at 70, Cheran Nagar, Ondipudur, Coimbatore. The appellant had applied for 6 KW vide application No.045021934, dt 01.02.2019. Based on the above application site inspection was carried out and SC was effected on 11.02.2019.

6.4 The Respondent has submitted that the Appellant had applied an online application for tariff change for the LT SC No 03-045-002-3478 from III B to III AI vide Application No: 0450722524 dt 09.07.2022. Based on the above application site inspection was carried out. On inspection it is found that the following machineries were available in the above premises.

| SI NO | NAME OF THE MACHINE | LOAD |
|---|---|---|
| 1 | Milling Machine | 3 HP |
| 2 | Milling Machine | 3 HP |
| Total Load | | 6 HP |

6.5 The Respondent has submitted that the Appellant's industrial unit is involved in Rotary Cutter remove material cutter in to a workpiece & tool grinding work based on job order. During the hearing the Respondent has stated that the job work done by the Appellant was not a manufacturing activities and the work carried out by the Appellant was not an end to end product to decide as a manufacturing product. Further, the Appellant had not enclosed the competent certificate from District Industrial Centre mentioning the activitity of the Appellant listed in the first schedule to Industries (Development and Regulations)Act 1951 (Central Act 65 of 1951) and enterprises engaged in manufacturing or production of goods as categorised under MSMED Act 2006.

6.6 Further, the Respondent has argued that the Low Tension tariff Tariff III A(1) (Cottage and Micro Industries) applicable to the manufacturing industries listed in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951). As well as Air Jet looms, Auto looms, Small Gem cutting units, waste land development, Ironing/laundry works and common effluent treatment plans, Coffee grinding, Ice factory, vehicle Body building units, saw mills, rice mills, flour mills, battery charging units and Dairy units. Further argued that UDYAM Registration certificate from the industries department/District Industries Centre shall applicable to both III B industrial tariff as well as III A(1) tariff. The certificate mentioning manufacturing activities as per the First Schedule to Industries (Development and Regulations) Act 1951 is very much needed. However, both the Appellants did not furnished the same. Hence, it is prayed to the Ombudsman if at all the prayer of the Appellant considered tariff change to III B to III A(1) without the above certificate will open a situation more tariff change applications from III B to III A(1) which will leads to great revenue loss to the Licensee. Hence the prayer may be dismissed.

6.7 The appellant was informed that the above industry falls under III B category as per TNERC order no 07 of 2022 in TP No.1 of 2022 dt. 09.09.22 vide க.எண் உமி. பொ/இ& பே/கா.ந/வ.ஆ/ கோ.Applicant/அ.எண் : 026/22-23, நாள். 29.8.22.

6.8 The Respondent has submitted that the appellant filed a CGRF petition no 174/2022 on 10.10.2022 requesting for tariff change from III B to III A1 for the LTSC no 03-045-002-3478 with sanctioned load of 6 KW. As per TNERC tariff order no 07 of 2022 in TP No 1 of 2022, dt 09.09.22 as stated under para

> *"6.2.10.1 The contracted load for supply under III A1 tariff category shall not exceed 12 KW*
> *6.2.10.2 This tariff is made applicable to cottage industries, micro enterprises engaged in the manufacture or production of goods pertaining to any industries-specified in the first schedule to Industries(Development and regulations) Act 1951 (Central ACT 65 of 1951) and enterprises engaged in manufacturing or production of goods as categorized under MSMED Act 2006.*

*6.2.10.3 The intending consumers applying for service connection under LT III A1 claiming to have established the micro enterprise engaged in the manufacture or production of goods shall produce the Udayam Registration certificates from the industrial department/District industries center under the micro small medium Enterprises Development Act, 2006 (Act 27 of 2006) for setting up of micro enterprises for manufacture or production of goods with District Industries center under whose jurisdiction the enterprise is located.*

*6.2.10.4 The existing consumers who are classified under LT Tariff III A1 based on the SSI/Tiny industries certificate will be continued to be charged under this tariff.*

*6.2.10.5 This tariff is applicable to air jet looms, small gem cutting units, waste land development, ironing/laundry works and common effluent treatment plants.*

*6.2.10.6 This tariff is also applicable to coffee grinding, ice factory, vehicle body building units, saw mills, rice mills, flour mills, battery charging units and dairy units.*

*6.2.10.7 This tariff is also applicable for sericulture, horticulture, floriculture, mushroom cultivation, cattle farming, poultry& bird farming and fish/prawn culture."*

6.9 Hence it was stated by the CGRF forum that the appellant's request to change the tariff to III A1 does not arise, the Respondent stated.

6.10 The Respondent has stated that the appellant's request for tariff change from III B to III A1 has not been effected as per TNERC tariff order and CGRF order.

**7.0 <u>எதிர்மனுதாரர் வாதுரைக்கு மேல்முறையீட்டாளர் எழுத்து பூர்வமாக சமர்ப்பித்துள்ள மறுப்புரை:</u>**

7.1 Tariff Order 2017 – Regarding 3A1 Tariffல் கூறப்பட்டுள்ளபடி, மேல்முறையீட்டாளரது Contracted load 12kw –க்கு குறைவாகவும் (6kW), உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளதற்கு சான்றாக UDYAM Registration Certificate சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் கூடுதலாக National Industry Classification Code (NIC) 2590 – Machining, Manufacturing பிரிவின் கீழ் வருவதையும் ஆதாரமாக சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் 2017ம் ஆண்டு பெறப்பட்ட Udyog Aadhaar Memorandam சமர்ப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.2 மேலும் 2008–ம் ஆண்டில் மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்பட்ட ENTREPRENEUR'S MEMORANDUM ACKNOWLEDGEMENT–ல் Job Machining என்பதும்

MANUFACTURING பிரிவின் கீழ் வருவதாகவும், மேலும் கூடுதல் ஆதாரமாக அவரது நிறுவனத்தின் GST Profile–ல் MANUFACTURER என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதையும், தாங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோம் என்பதற்கு சான்றாக மூன்று வகையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், இருப்பினும் PRODUCTION of goods என்ற பதத்திற்கான விளக்கம் "மின்சாரத்தை பயன்படுத்தி இயந்திரத்தை இயக்கி, மூலப்பொருட்களின் உருவமாற்றம் மற்றும் (VALUE ADDITION) மதிப்புக்கூட்டலில் ஈடுபடுவதாகவும் எனவே Manufacturing / Production of Goods என்ற இரு பிரிவிலுமே தங்கள் தொழில் உள்ளடங்கும் என்பதை மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

*Tariff order 2017, Regarding LT – 3B,*

*6.2.11.3 The intending consumers applying for service connection under LT Tariff III B claiming to have established the industries engaged in the manufacture or production of goods shall produce Udyog Aadhar Memorandum from the District Industries Centre -* என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

அதாவது LT–3B மின்இணைப்பு Industries வகையில் பெறுவதற்கு Manufacture / Production of Goods –ல் ஈடுபட்டுள்ளதற்கு சான்றாக Udyog Aadhar Memorandum சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் தனது மின்இணைப்பு ஏற்கனவே LT – 3B பெற்றுள்ளதால், தனது நிறுவனம் Manufacture / Production of Goods–ல் ஈடுபட்டுள்ளது உறுதியாகிறது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும் எதிர்மனுதாரர், தாங்கள் ENGINEERING JOB WORK செய்வதாக கூறி, அதன் காரணமாக 3A1 Tariffயை மறுப்பதாகவும், Jobwork, Manufacturing பிரிவில் வராது, இரண்டும் வேறு வேறு என்று அவர்கள், முன்வைக்கும் வாதங்களை நிரூபிக்க எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை எனவும் மேல்முறையிட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 இதுகுறித்து தமிழக முதல்வரின் CM Cell–யை தொடர்பு கொண்டதால், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், கோவை அவர்கள் எழுத்துபூர்வமாக அளித்த பதிவில் Jobwork செய்வதும் Manufacturing பிரிவின் கீழ் தான் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

*"Tariff order 2017, 6.2.9.2 & Tariff Order 2022, 6.2.10.2, Regarding 3A1 Tariff,*

*6.2.9.2 This tariff is applicable to cottage and tiny Industries, Micro enterprises engaged in the manufacture or production of goods pertaining to any industries specified in*

*the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951).*

*6.2.10.2 This tariff is applicable to Cottage Industries, Micro enterprises engaged in the manufacture or production of goods pertaining to any industries specified in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 55 of 1951) and enterprises engaged in manufacturing or production of goods as categorised under MSMED Act 2006-**ல் குறிப்பிட்டுள்ள** First schedule to Industries Act 1951-**ல்,***

*Any industry engaged in the manufacture or production of any of the articles mentioned under each of the following headings or sub-headings, namely:-*
*1.Mettalurgical Industries:*
*A.Ferrous*
*1. Iron & Steel (metal), 2. Ferro-Alloys, 3. Iron and steel casting and forgings"* – என தங்கள் தொழிலில் பயன்படுத்தும் மூலப்பொருள் குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

Enterprises categorised under MSMED Act 2006;

Enterprise means an industrial undertaking or a business concern or any other establishment, by whatever name called, engaged in the manufacture or production of goods, in any manner pertaining to any industry specified in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951) or engaged in providing or rendering of any service or services; என குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

எனவே தங்கள் தொழில் 3A1 tariffக்கு, Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951) தெரிவித்துள்ள வகையில் முழுத்தகுதி பெறுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும் Tariff order 2017, 6.2.9.2, 6.2.9.3 & Tariff Order 2022, 6.2.10.2, 6.2.10.3 – ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் தங்கள் தொழில் வருமென்பதால், Tariff order 2017 – 6.2.9.5, 6.2.9.6, 6.2.9.7 & Tariff Order 2022–6.2.10.5, 6.2.10.6, 6.2.10.7–ல் தங்கள் தொழில் பற்றி தனியாக குறிப்பிடவேண்டிய அவசியம் எழவில்லை என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் அந்த பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களான Airjet looms, auto looms, small gem cutting units, ironing & laundry works, coffee grinding, saw mills, rice mills, flour mills, battery charging units போன்றவை industries வகையின் கீழ் முழுமையாக தகுதிபெறாவிட்டாலும், அவைகளை ஊக்கப்படுத்தும் மற்றும் முன்னேற்றும் வகையிலும் அத்தொழில்கள் LT–3A1 கீழ் இணைக்கப்பட்டுள்ளன என்று CGRF Order No.024, date:

06/05/2023-ல் Page No.13-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

அப்பத்தி பின்வருமாறு உள்ளது.

*"Though activities of some of the concerns/units are not purely industries in nature, in order to encourage and promote such units/ concerns, the commission has consciously included such industries under this LT-IIIA for cottage, tiny and small scale industrial category. Such concerns/ units those are specially included in the existing & earlier tariff orders of the commission are as below: small gem cutting units, waste land development, laundry works and common effluent treatment. plants, etc...."*

Tariff order 2017, 6.2.9.3 -ல் "Certificates from the industrial department / acknowledgement issued by the District Industries Centre" என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் udyam registration certificate மூலம் Tariff order 2022 வெளியாவதற்கு முந்தைய காலகட்டத்தில் பயன்பெற எவ்வித தடையுமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 எதிர்மனுதாரர் சமரிப்பித்துள்ள வாதுரையில் வரிசை எண்.6-ல் தங்கள் நிறுவனத்தில் Miling Machine உள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், அதேசமயம் வேலை நடைபெறுவது தவறாக கூறப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட இயந்திரங்களில் செய்யப்படும் வேலைகள் Miling என்று குறிப்பிடப்பட வேண்டும் என்று பலமுறை அவர்களிடம் சொல்லியபின்பும், எதிர்மனுதாரர் தொடர்ந்து இவ்வாறு குறிப்பிடுவது மிகவும் வருத்தத்தை அளிப்பதாகவும், மேலும் இதில் ஏதேனும் உள்நோக்கம் உள்ளதோ என்ற சந்தேகமும் எழுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.8 CGRF Order No.025, Page No. 13 -ல் நான் சமர்ப்பித்த ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் என அனைத்தையும் புறம்தள்ள இயலாது என்றும், மேலும் எதிர்தரப்பு (Distribution Licensee) எவ்வித ஆதாரங்களையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

அப்பத்தி பின்வருமாறு,

"But, we cannot set aside the documents and evidences produced by the petitioner claiming for having manufacturing process in its premises as defined under the industries act 1951 and the factories act 1948. Moreover, the respondent has not produced any evidence or document to establish their side to prove there was only job order activity. It is the onus of the respondent that to substantiate the fault in activity or otherwise the respondent will lose its side of argument. The statement of the distribution licensee must be unambiguous and confident."

7.9 எனவே தனது கோரிக்கை தொடர்பான தனது அனைத்து கருத்துகளையும் உரிய ஆதாரங்களுடனும், அதற்கு தக்க விளக்கங்களையும் தங்கள் முன்பு சமர்ப்பித்துள்ள நிலையில் உடனடியாக தனது மேல்முறையீட்டின் மீது தக்க நடவடிக்கையெடுத்து மேல்முறையீட்டு மனுவில் கோரியுள்ள நிவாரணங்களை விரைந்து வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 8.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

8.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளர் திரு A.விஸ்வநாதன் கதவு எண் 70, சேரன் நகர், ஒண்டிபுதூர் என்ற முகவரியில் தனது மனைவி திருமதி விஜயா பெயரில் ஸ்ரீ ஸ்வாதி இன்ஜினியரிங் என்ற நிறுவனத்தை MILLING இயந்திரங்களை பயன்படுத்தி உற்பத்தி தொழில் செய்யும் குறுந்தொழில் நிறுவனம் நடத்தி வருவதாகவும், 11.2.2019 முதல் மின் இணைப்பு எண் 045-002-3478, மின்பளு 6KW, வீதப்பட்டி III B பெற்று பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

8.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பை குறுந்தொழில் நிறுவனங்களுக்குரிய III A1 வீதப்பட்டியலுக்கு மாற்றிதரக் கோரி 9.7.2022 அன்று UDYAM Registration Certificate, சரக்கு மற்றும் சேவை வரி ரசீது, தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் வணிகத் துறையிடமிருந்து பெற்ற ஒப்புதல் மற்றும் UDYOG Aadhar Memorandum ஆகியவற்றை இணைத்து விண்ணப்பித்துள்ளார்.

8.4 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் மேற்கூறிய நிறுவனத்தை களஆய்வு செய்ததாகவும், அதன்படி அவ்விடத்தில் இரண்டு Milling மெஷின் உபயோகப்படுத்தி job work செய்து வருவதாகவும், இந்த உபயோகமானது III B வீதப்பட்டியலுக்கு பொருத்தமானது எனவும், எனவே அந்நிறுவனம் III A1 வீதப்பட்டியலுக்கு தகுதி இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், TNERC Tariff Order No. T.P. No.1 of 2017 dated 11-08-2017-இன்படி III A1

வீதப்பட்டியலானது Cottage and Tiny industries–க்கு பொருத்தமானதாகும் எனவும், எனவே மேல்முறையீட்டாளர் அதற்குண்டான MSME சான்று அல்லது Cottage Industries Certificate from Industial Department பெற்று அதன்படி அவ்விடத்தில் உபயோகப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.5 மேற்கண்ட வாதங்களின் மூலம் இவ்வழக்கில் தீர்வு காண வேண்டியது மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு III A1 வீதப்பட்டிக்கு தகுதியுடையதுதானா என்பதாகும். எனவே, இது சம்பந்தமாக, மேல்முறையீட்டாளர் வீதப்பட்டியல் மாற்றத்திற்குறிய காலத்திற்கும் கேட்புரை நடைப்பெற்ற காலத்திற்கும் உரிய TNERC Tariff Order–ஐ ஆராய விரும்புகிறேன்.

**T.P. No.1 of 2017 dated 11–08–2017–இல் III A1 வீதப்பட்டியல்**

***"6.2.9 தாழ்வழுத்த மின் கட்டணம்** III-A(1):*

***6.2.9.1*** *இந்த மின்கட்டண வகையின் கீழுள்ள மின்வழங்கலுக்கான ஒப்பந்த மின்சுமை **12** கிலோவாட்டுக்கு மேற்படுதல் ஆகாது.*

***6.2.9.2*** *இந்த மின்கட்டணம், **1951** ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **65/1951**) முதலாம் **பின்** இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் எவையும் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள குடிசை மற்றும் குறுந்தொழில்கள், குறுதொழில் நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடியதாகும்.*

***6.2.9.3*** *தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA**(1)** இன் கீழ் மின்னிணைப்பு கோரி குறுந்தொழில் நிறுவனம் பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது என்பதை நிரூபித்து விண்ணப்பித்துள்ளவரும், தொழில் துறையிடமிருந்து பெற்ற குடிசைத் தொழில் சான்றிதழை அல்லது எவருடைய அதிகாரவரம்பின் கீழ் இந்த நிறுவனம் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட தொழிற்மையத்திடம், குறுந்தொழில் நிறுவனம் பொருள் உற்பத்தி செய்வதற்காக அல்லது தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளதற்காக தொழில் முனைவோரின் அமைப்பு விதிக் குறிப்பை சான்றாக தாக்கல் செய்துள்ளவருமான ஆர்வமுள்ள மின்நுகர்வோர் **2006** ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சி சட்டத்தின்படி (சட்டம் **27/2006**) மாவட்ட தொழில் வளர்ச்சி மையத்தினால் வழங்கப்பட்ட ஒப்புகைச் சான்றிதழை முன்னிலைப்படுத்துதல் வேண்டும்."*

**T.P. No.7 of 2022 dated 09.09.2022–இல் III A1 வீதப்பட்டியல்**

*"6.2.10.1 The contracted load for supply under this tariff category shall not exceed 12 kW.*

*6.2.10.2 This tariff is applicable to Cottage industries, Micro enterprises*

*engaged in the manufacture or production of goods pertaining to any industries specified in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951) and enterprises engaged in manufacturing or production of goods as categorised under MSMED Act 2006.*

*6.2.10.3* *The intending consumers applying for service connection under LT Tariff III A (1) claiming to have established the micro enterprise engaged in the manufacture or production of goods shall produce the Udayam Registration certificates from the industrial department / District Industries Centre under the Micro Small and Medium Enterprises Development Act, 2006 (Act 27 of 2006) for setting up of Micro Enterprises for manufacture or production of goods with District Industries Centre under whose jurisdiction the Enterprise is located."*

8.6 மேற்கண்ட விளக்கத்தின்படி III A1 வீதப்பட்டியில் ஒரு தாழ்வழுத்த மின்னிணைப்பு பெற கீழ்க்கண்ட இரண்டு விதிகளும் நிறைவு செய்திருக்க வேண்டும்.

1) மின்னிணைப்பு கோரும் நிறுவனமானது 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் எவையும் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள குடிசை மற்றும் குறுந்தொழில்கள், குறுதொழில் நிறுவனமாக இருக்கவேண்டும்.
2) அவ்வாறு உள்ள குறுந்தொழில் நிறுவனமானது பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்ய கீழ்க்கண்ட ஆவணங்கள் அளிக்க வேண்டும்.
அ) தொழில் துறையிடமிருந்து பெற்ற குடிசைத் தொழில் சான்றிதழ். அல்லது
ஆ) 2006–ம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சி சட்டத்தின்படி மாவட்ட தொழில் மையத்திடம் பெற்ற ஒப்புகைச் சான்றிதழ்.

8.7 மேல்முறையீட்டாளர் தனது தரப்பு விளக்கமாக UDYAM Registration Certificate, சரக்கு மற்றும் சேவை வரி ரசீது, தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் வணிகத் துறையிடமிருந்து பெற்ற ஒப்புதல் மற்றும் UDYOG Aadhar Memorandum ஆகியவற்றை இணைத்துள்ளார்.

8.8 எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் நிறுவனத்தை களஆய்வு செய்ததாகவும், அதன்படி அவ்விடத்தில் இரண்டு Milling மெஷின் உபயோகப்படுத்தி job work செய்து வருவதாகவும், இந்த உபயோகமானது III B வீதப்பட்டியலுக்கு பொருத்தமானது எனவும், ஆனால் அந்நிறுவனம் III A1 வீதப்பட்டியலுக்கு தகுதி பெறுவதற்கு First schedule to

Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951)–இல் கூறப்பட்ட செயல்களுக்கான ஆவணங்கள் உரிய District Industries Centre (DIC)–இல் இருந்து பதிவு செய்யப்படாததாக இருப்பதாகவும் வாதிட்டார்.

8.9 மேலும் III A(1) வீதப்பட்டியல் என்பது அரசால் subsidiary Tariff–ஆக வழங்கப்படுவதால் அது அரசாங்கத்திற்கும்/வாரியத்திற்கும் பெறவேண்டிய வருமானத்தில் உரிய தொழில்கள் மட்டும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்கான அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதால் மேல்முறையீட்டாளர் இணைத்துள்ள UDYAM certificate தாங்களாகவே நிகழ்நிலை பதிவு மூலம் பெறப்படுவதால் அதற்கான உரிய சான்றிதழ் வழங்கப்பட்டாலும், UDYAM பதிவு தன்னார்வமானது என்பதாலும் இது பதிவு செய்யப்பட்ட MSME களுக்கு கடன், மானியங்கள் மற்றும் அரசாங்கத்திற்கான எளிதான அணுகல் போன்ற பல்வேறு நன்மைகளை வழங்குகிற திட்டமாகும். இது III B வீதப்பட்டியலில் வரும் தொழிற்சாலைக்கும் பொருந்தும் என தெரிவித்துள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் தொழிற்சாலை Cottage and Micro Industries மூலம் உற்பத்தி சார்ந்த தொழில் என்றும் அது மத்திய சட்டம் 1951 ஆம் முதல் அட்டவணையில் உள்ளது என்று சான்றிதழ் தேவை என்று எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார்.

8.10 இவ்வழக்கில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது LT வீதப்பட்டி III A1 ஆனது குடிசை மற்றும் குறு தொழில்களை (cottage and small scale industries) ஊக்குவிப்பதற்காகவும், IIIB வீதப்பட்டி வகையுடன் ஒப்பிடும்போதும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை விட மானியத்துடன் கூடிய கட்டணத்தை முதல் யூனிட்டிலிருந்து நிர்ணயம் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

8.11 பத்தி 8.6–ல் உள்ள தீர்வுகளின்படி LT வீதப்பட்டி III A1–ன் கீழ் மின்னிணைப்பு கோரும் நிறுவனமானது 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் எவையும் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள குடிசை மற்றும் குறுந்தொழில்கள், குறுதொழில் நிறுவனமாக இருக்கவேண்டும் என அறியப்பட்டுள்ளது.

ஆனால் மேல்முறையீட்டாளர் அளித்த ஆவணங்களில் அவருடைய மின்னிணைப்பில் மேற்கொள்ளப்படும் தொழிலானது உற்பத்தி சார்ந்த தொழில்தான் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எதிர்மனுதாரரும் அதை மறுக்கவில்லை. ஆனால் மேல்முறையீட்டாளர் வழங்கிய ஆவணங்களில் அவர் நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் தொழிலானது மேற்கூறிய சட்டத்தின் முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள உற்பத்திக்கான தொழிற்சாலைதான் என தெளிவாக எதுவும் குறித்துரைக்கப்படவில்லை. அவ்வாறு உள்ள நேர்வில் மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலை Cottage and Micro Industries மூலம் உற்பத்தி சார்ந்த தொழில் என்றும் அது மத்திய சட்டம் 1951 ஆம் முதல் அட்டவணையில் உள்ளது என்று சான்றிதழ் தேவை என வாதிட்டுள்ள எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

8.12 மேலும், மேல்முறையீட்டாளர் தங்களுடைய தொழிற்சாலையின் உற்பத்தி வகையை எதிர்மனுதாரர் உரிய உரிமைக் கோரல் அலுவலகத்தில் முறையிட்டு ஆராய்ந்திருக்க வேண்டும் என்றும் வாதிட்டார். ஆனால் மின்பளு சம்பந்தப்பட்ட விசயத்தில் மட்டுமே முடிவெடுக்க எதிர்மனுதாரரால் முடியும் என்பதாலும், உரிய ஆவணங்களை சமர்ப்பித்து நிரூபணம் செய்ய வேண்டியது மேல்முறையீட்டாளரின் கடமையாகும் எனவும் நான் கருதுகிறேன்.

8.13 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் TNERC Tariff Order–ல் குறித்துரைக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்றவாறு அவர் அளித்த ஆவணங்களில் அவருடைய மின்னிணைப்பில் மேற்கொள்ளப்படும் தொழிலானது, 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள உற்பத்திக்கான தொழிற்சாலை என எதுவும் குறித்துரைக்கப்படவில்லை. அவ்வாறு உள்ள நேர்வில் வீதப்பட்டி IIIB–லிருந்து III A1–க்கு மாற்றக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை பரிசீலனைக்கு உகந்ததல்ல என்பதால் அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.14 மேலும், மேல்முறையீட்டாளர் தங்களுடைய நிறுவனம் ஈடுபட்டுள்ள தொழில் First schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951)–இல் சான்றிதழ் இணைக்காமல் கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை உரிய வட்டியுடன்

திருப்பித்தருமாறும் கோரியுள்ளார். ஆனால் மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி அவருடைய விண்ணப்பம் முழுமையாக இல்லாத நிலையில் அவரின் கோரிக்கையை நிறைவேற்றாத எதிர்மனுதாரரின் செயலை சேவைக் குறைபாடாக கருத இயலாது.

8.15 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான சேவைக் குறைபாடு, கடந்த ஏழுமாத காலமாக மன உளைச்சல் காரணமாக இழப்பீடு வழங்க வேண்டியும், மற்றும் வழக்கு செலவை எதிர்தரப்பிடமிருந்து பெற்றுத்தருமாறும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. ......................*

*..............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

8.16 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்ககான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், உரிய ஆவணங்களின்றி விகிதப்படி மாற்ற கோரும் முறையீட்டில் சேவை குறைபாடு இருப்பதாக வாதிடுவது தள்ளுபடி செய்யப்படுகிறது.

9.0 **பகுப்பாய்வு:**

9.1 மின்குறைத் தீர்ப்பாளர் மின்சார சட்டம் மற்றும் ஆணையத்தால் வகுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகள் மற்றும் மின்கட்டண ஆணை ஆகியவற்றிற்கு உட்பட்டே எந்தவொரு தீர்வும் வழங்க இயலும். அவ்வாறே இவ்வழக்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்வானது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய மின்கட்டண ஆணையின்படியே முடிவு செய்யப்பட்டுள்ளது. வாதுரையின்போது மேல்முறையீட்டாளர் ஆணையம் வழங்கியுள்ள மின்கட்டண ஆணையின்படி தாங்கள் வழங்கிய ஆவணங்கள் போதுமானதுதான் என்று வாதிட்டுள்ளார். ஆனால் III A1 வீதப்பட்டியில் ஒரு தாழ்வழுத்த மின்னிணைப்பு பெற மின்கட்டண ஆணையில் கொடுக்கப்பட்ட இரண்டு விதிகளும் நிறைவு செய்திருக்க வேண்டும் என நான் கருதுகிறேன். மேல்முறையீட்டாளர் அளித்த ஆவணங்களில் மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலை Cottage and Micro Industries மூலம் உற்பத்தி சார்ந்த தொழில் என்றும் அது மத்திய சட்டம் 1951 ஆம் முதல் அட்டவணையில் உள்ள தொழில்தான் என்று குறிப்பிடப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர், வீதப்பட்டி ஆணையில் ஏதாவது தெளிவு பெற வேண்டும் என்றால் அச்செயல் மின்குறைதீர்ப்பாளர் வரம்புக்குள் வராது என்பதாலும் அதில் ஏதேனும் விளக்கம் பெற வேண்டும் என்றால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை அணுகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

10.0 **முடிவுரை:**

10.1 மேற்கூறிய பத்தி 8–இல் உள்ள தீர்வுகளின் படி, மேல்முறையீட்டாளர்கள் திரு அ. விஸ்வநாதன் மற்றும் திரு செ.பழனிசாமி ஆகியோர் TNERC Tariff Order–ல் குறித்துரைக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்றவாறு அவர்களுடைய மின்னிணைப்பில் மேற்கொள்ளப்படும் தொழிலானது, 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள உற்பத்திக்கான தொழிற்சாலை என எதுவும் குறித்துரைக்கப்படவில்லை என்ற நேர்வில் வீதப்பட்டி IIIB–லிருந்து III A1–க்கு மாற்றக் கோரும் கோரிக்கை பரிசீலனைக்கு உகந்ததல்ல என்பதால் மேல்முறையீட்டு மனு 33/2023 மற்றும் 34/2023 ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு என் 33/2023 மற்றும் 34/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு அ. விஸ்வநாதன், – By RPAD
70, சேரன் ஒண்டிபுதூர்,
கோயமுத்தூர் – 641 016.

2. திரு செ.பழனிசாமி, – By RPAD
3/18, மகாலட்சுமி நகர், மசக்காளி பாளையம்,
கோயம்புத்தூர் – 641 015.

3. செயற்பொறியாளர்/இ.பே./ஒண்டிபுதூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருச்சி ரோடு, கோயம்புதூர் – 641 038.

4. உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ ஒண்டிபுதூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 1, JOC Cottage, கஸ்தூரி நகர்,
கோயம்புதூர் – 641 016.

5. உதவி மின் பொறியாளர்/ இ.பே/காந்தி நகர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
142, அண்ணாச்சி தோட்டம், சிந்தாமணிபுதூர்,
கோயம்புதூர் – 641 104.

6. உதவி செயற்பொறியாளர்/ இ.பே./ சிங்கநல்லூர்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2212, 2வது தளம், சிங்கநல்லூர் கிழக்கு ரோடு, திருச்சி ரோடு,
சிங்கநல்லூர், கோயம்புதூர் – 641 005.

7. உதவி மின் பொறியாளர்/ இ.பே/வரதராஜபுரம்,
கோவை மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
இந்திரா கார்டன், கோயம்புதூர் – 641 015.

8. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

9. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

10. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.